Book. No. 105.          C.H. Ramalingam

ஸ்ரீமதி பிக்சர்ஸ்



ஆசை

# அண்ணா

அருமைத்

# தம்பி

கதை

BALAN

## CREDITS

# ASAI ANNA ARUMAI THAMBI

*Cast :—*

MALES

| | | |
|---|---|---|
| A. P. Nagarajan | ... | Sivaraman |
| T. R. Ramachandran | ... | Balaraman |
| Sairam | ... | Pandian |
| Elumalai | ... | Pandit |
| Sivasuriyan | ... | Anandam (Zamindar) |
| Narayana Pillai | ... | Sakuni |
| Karunanithi | ... | Karuppu |
| Raghuveer | ... | Doctor Sukumaran |
| Balaram | ... | Folk dancer |

FEMALES

| | | |
|---|---|---|
| Madhuri Devi | ... | Kannamma |
| Sulochana | ... | Bharathi |
| Sushila | ... | Kalyani |
| Bhagyam | ... | Segappu |
| Vimala | ... | Dhanam |

---

| | | |
|---|---|---|
| Screenplay | ... | S. Mookerjea |
| Dialogue | ... | Sakthi Krishnaswamy |
| Songs | ... | Ramiah Doss, Marutha-kasi, & Shariff |
| Editing | ... | B. Kandaswami & Vijaya-rangam |
| Processing | ... | C. A. Sundararaj, Shindey & Newtone lab |
| Photography | ... | T. Marconi |
| Music | ... | K. V. Mahadevan |

*Direction:* **G. R. Rao**

*Produced by:* **Madhuri Devi**

at Central Studios (Coimbatore)
Film Centre (Madras)
Newtone Studios (Madras)

# ஆசை அண்ணா அருமைத் தம்பி

## கதை

நகரின் எல்லையிலே ஒரு சேரி. அதில்தான் அவ் விரு சகோதரர்களும் வசித்து வந்தார்கள். தாய் தந்தையரற்ற அவ்விரு சகோதரர்களில் மூத்தவனான சிவராமன் ஒரு பி. ஏ. பட்டதாரி. வேலைக்காக அவன் பட்ட சிரமங்கள் கொஞ்ச நஞ்சமல்ல. அவனுடைய ஒரே சகோதரனான பலராமன் ஒரு படிக்காத அறிவாளி. தன் அண்ணன் தான் அவனுக்கு சகலமும். அவனுக்கு சேவை செய்வதையே தன் வாழ்நாளின் கடமையாகக் கொண்டிருந்தான். சுருங்கச் சொன்னால் அவன் தன் படித்த அண்ணனை மாந்தருள் தெய்வமாகவே போற்றி வந்தான். அதே சேரியில்தான் பாண்டியனும் அவன் மகள் கண்ணம்மாவும் இருந்தார்கள். கால வித்யாசத் தினால் பாண்டியன் பால் வியாபாரம் செய்து குடும்பத்தை நடத்திவந்தான். பாண்டியனுக்கு பலராமன் பேரில் ஒரு அலாதி பிரியம். அவன் சமையல் வேலை செய்து கஷ்டப் படுவதைக் கண்டு தன் மகள் கண்ணம்மாவை, அடிக்கடி உதவி செய்யுமாறு பாண்டியன் அனுப்பிக் கொண்டிருந் தான். நாளடைவில்தானே பலராமனது அண்ணியாகப் போகிறோம என்ற எண்ணம் அப்பொழுது கண்ணம்மா வுக்கு சிறிதேனும் இல்லை. வேலையில்லாத் திண்டாட்டத் தின் கொடுமையை பரிபூரணமாக அனுபவித்துக் கொண் டிருந்த சிவராமன் கல்யாணம் செய்துகொண்டு குடும்பத் தொல்லையை மேலும் அதிகரித்துக்கொள்ள விரும்பா விடினும், "லக்ஷ்மி வீட்டினுள் காலெடுத்து வைத்தால், தரித்திரம் பறந்துபோய்விடும" என்று ஒரே பிடிவாத மாகக் கூறிய பலராமனின் விடா முயற்சியால் சிவராம னுக்கும் கண்ணம்மாவுக்கும திருமணம் நடக்கிறது. ஏழ்மை தாண்டவமாடும் அந்தக்குடியில் ஒரு இளஞ்சிசு வும் உதயமாகிறது. அதே சமயம வறுமையும் உச்சத்

தின் எல்லையை அடைகிறது. சிவராமன் எவ்வளவோ முயற்சித்தும் ஒரு வேலையும் கிடைக்கவில்லை. நல்லவர்களை நசுக்கும் நாசக்காரர்களும், நன்றி கெட்டவர்களும் நிறைந்த இந்த உலகத்திலே ஒரு ஏழைப் பட்டதாரிக்கு இடமில்லை என்பதை உணர அதிகநாள் பிடிக்கவில்லை சிவராமனுக்கு.

ஒருநாள் கடன் தொல்லை பொறுக்க முடியாமல், தன்னை துரத்திவந்த காபூலியிடமிருந்து தப்புவதற்காக ஓர் வீட்டினுள் ஒளிந்துகொள்கிறான் சிவராமன். ஆனால் அதே வீட்டினுள் தனக்காக ஒரு பெரிய உத்யோகம் காத்திருக்கிறது என்று அவன் எதிர்பார்க்கவில்லை. அந்த வீட்டுச் சொந்தக்காரரான ஜமீன்தார் ஆனந்தம் ஒரு பயங்காளி. தன்னுடைய ஒரே பெண்ணான பாரதியுடன் கிராமத்திலிருக்கும் பங்களாவைவிட்டு பட்டணத்தில் குடியேறியிருந்தார். சகுனியின் தொல்லை பொறுக்காமல். சகுனி அந்த கிராமத்தில் ஒரு பெரிய புள்ளி. பல கையாட்களை வைத்துக்கொண்டு ஜமீன் சொத்தை ஏப்பமிட்டு வந்தான். வழக்கு வியாஜ்யங்கள் அவனுக்கு தண்ணீர் பட்டபாடு. இதற்காகவே தன் மூத்த மகனை வக்கீலுக்குப் படிக்க வைத்திருந்ததோடு, எப்படியாவது ஜமீன் சொத்தை அபகரித்து, ஜமீந்தார் மகள் பாரதியையும் தன் மகனுக்கே மணமுடிக்கத் திட்டமிட்டிருந்தான் பெயருக்கேற்ற குணாதிசயங்களையுடைய சகுனி. அவனை அடக்குவதற்குத் தகுந்த ஆளாகத் தேடிக்கொண்டிருந்த ஆனந்தத்துக்கு தன் எதிரே நிற்கும் கட்டு மஸ்தான தேகமுடைய சிவராமனைக் கண்டதும் சந்தோஷம் கரை புரண்டோடியது. நினைத்ததை உடனே நிறைவேற்றும் ஆனந்தம் சிவராமனை அந்த க்ஷணமே தன் எஸ்டேட் மானேஜராக நியமித்ததோடு உடனே கிராமத்துக்குச் சென்று சகுனியின் கொட்டத்தை அடக்குமாறு கட்டளையிடுகிறான். தன் ஆசைத்தம்பியிடமும் அருமைக்காதலியிடமும் கூட சொல்லிக்கொள்ள முடியாமல் சிவராமன் கிராமத்துக்குக் கிளம்ப நேரிடுகிறது. இருண்ட பாலைவனத்திலே ஒரு தேன் அருவிபோலிருந்த இந்தவேலையை இழந்துவிட மனமில்லாமல் சிவராமன் மறு பேச்சின்றி

கிராமத்துக்குக் கிளம்புகிறுன். ஆவலுடன் அண்ணனை சந்திக்கவந்த தம்பி பலராமனுக்கு பைத்தியக்காரப் பட்டந்தான் கிடைக்கிறது.

கும்பிடப் போனவனை குட்டிச் சாத்தான் எதிர்கொண்டழைத்ததுபோல் சிவராமன் எதிர்பாராத விதமாக சகுனியை ஒரு கோவிலில் சந்திக்கிறுன். பாரதியையும் சிவராமனையும் ஒன்றுகப் பிணைத்து சகுனி கிண்டல் செய்கிறுன். சிவராமன், தான் ஜமீன் மேனேஜர் என்றும், சகுனியை மறுநாள் காலை 9 மணிக்கு வந்து தன்னை சந்திக்கும்படியாகவும் கட்டளையிடுகிறுன். ஆனல் எதையும் லக்ஷியம் செய்யாத சகுனி அங்கே வராமல் போகவே, அவனை சந்திக்க சிவராமனே கிளம்புகிறுன். பாரதி அவனை கையைப் பிடித்துத் தடுக்க எதிர்பாராத விதமாக சகுனி அங்கு வந்து அவர்களிருக்கும் நிலையைப் பார்த்து விடுகிறுன். சிவராமன் அவனது அட்டூழியங்கள் மிதமிஞ்சிப் போகிறதென்றும், வரிபபணமாகிய ரூ. 10,000/-த்தையும் 3 மாத தவணைக்குள் செலுத்திவிட வேண்டுமென்றும் சகுனிக்கு கண்டிப்பாக உத்தரவிடுகிறுன். ஆத்திரமடைந்த சகுனி ஊரெங்கும் பாரதி—சிவராமன் இவர்களிடையே கள்ளத்தொடர்பு இருப்பதாக பறைசாற்றி அதை பகிரங்கமாக கோவில் திருவிழாவின்போது ஒரு நடன நாடகமாக நடிக்கவும் ஏற்பாடு செய்கிறுன. இதற்காக சிவராமனுக்கும் அழைப்பிதழ் வருகிறது. நடனம் நடந்து கொண்டிருக்குமபோது சிவராமன் திடீரெனத்தோன்றி சகுனியைத் தாக்குகிறுன். ஆனல் அங்கு நடந்த கைகலப்பில் சகுனியின் மூத்த மகன் வக்கீல், சிவராமனின் துப்பாக்கிக்குப் பலியாகிறுன். சிவராமனைத் தேடிவந்த பாரதி அவனை அங்கிருந்து இழுத்து சென்றுவிடுகிறுள். இதற்கிடையே புருஷனின் வருகையை கண்மேல் கண்வைத்து எதிர்பார்த்திருந்த கண்ணம்மாவின் நிலை, வறுமையின் கொடுமையும் சேர்ந்து, நாளுக்குநாள் மோசமாகிறது. ஒரு நாள் கீழே தவறி விழுந்த கண்ணம்மா பலத்த காயத்துடன் படுத்த படுக்கையாகி விடுகிறுள். தவித்துப்போன தம்பி பலராமன்

அண்ணனை அழைத்து வருகிறான். ஆனால் அவனுடன் மனைவியைக் காணவந்த சிவராமன் அவள் பிணத்தின் மேல் விழுந்து கதறுகிறான். "பட்டகாலிலே படும், கெட்ட குடியே கெடும்" என்ற வாக்குப்படி கொலைக்குற்றத்துக்காக சிவராமனை போலீஸார் கைது செய்து 15 வருஷம் கடுங்காவல் தண்டனை விதிக்கிறார்கள். அண்ணன் சிறையில் அவதியுற, நாதியற்ற பலராமன் குழந்தையுடன் வீட்டைவிட்டு வெளியே துரத்தப்படுகிறான். ஊரூராக அலைந்து கடைசியில் ஒரு தேயிலை எஸ்டேட்டுக்குப் போய்ச் சேருகிறான். அங்கே அவனது பழையநண்பர் பண்டிதரின் ஆதரவில் இருந்து வருகிறான்.

நாட்கள் பல சென்று மாதங்களாகி, வருஷங்களும் கழிந்தன. கண்ணம்மாவின் மகள் குழந்தை கல்யாணி பருவ மங்கையாகிறாள். சிறையிலிருந்து விடுதலையான சிவராமன் எவ்வளவோ முயற்சித்தும் பலராமன் இருக்குமிடத்தைக் கண்டுபிடிக்க முடியவில்லை. ஆனந்தம் தான் இறக்கும்போது எழுதிவைத்த உயில்படி சிவராமன் ஜமீந்தாராகிறான். கடுமையான மனப்போராட்டத்துக்குப் பிறகு பாரதியையும் மணக்கிறான். சகுனியின் பழைய பாக்கிக்காக சிவராமனின் கெடுபிடி அதிகரிக்கிறது. சகுனி, தன் இரண்டாவது மகன் சுகுமாரனின் கல்யாணத்தில் வரும் சீதனத்தைக் கொண்டு கடனைக் கட்டிவிடுவதாக வாக்களிக்கிறான். அங்கே கல்யாணிக்கும் அவனுக்குமிடையே காதல் இவர்களது அந்தரங்க நேசத்தையறிந்த பலராமனும் பண்டிதரும் அவர்களுக்குத் திருமணம் முடிக்கக்கருதி சகுனியின் உத்தரவிற்காக கிராமத்திற்கு வருகிறான் பலராமன். சகுனி இதற்கு ஒப்புக்கொள்ளுகிறானா? சிவராமனின் பாக்கி வசூலாகிறதா? பேதை கல்யாணியின் கதி என்ன?...... இவைகளுக்கு விடையை வெள்ளித்திரையில் காணுங்கள்.

## பாடல்கள்

இயற்றியவர்:

அ. மருதகாசி

பாடியவர்கள்:

கே. வி. மஹாதேவன், தோடி கண்ணன்,
எஸ். வி. கிருஷ்ணன், குமாரி சுசிலா,
குமாரி உடுதா, குமாரி பத்மா.

தொகையாரு

கிழக்கு வெளுக்கவே—இருளென்ற அழுக்கு விலகவே
சூரியன் கிளம்பி விட்டான் வழக்கம் போலவே
உறக்கம் நீங்கியே எழுந்து உழைக்க வேணுமே
இந்த உலகெலாம் செழிக்கவே!

பாட்டு

பொழைக்கும் வழியைப் பாரு!
ஒழைச்சா தான் சோறு!
பொழுதை வீணாக்கி சோம்பேறிப்பேரு
எடுத்துத்திரியாதே! காசு பணம் சேரு

ஓ!......ஓ......ஓ . (பொழைக்கும்)

போடு சிரங்கி கரணம் போடு சிரங்கி—ஹை!
ஆடுகின்ற அழகி போல ஆடு சிரங்கி—(போடு)
புருஷனிடம் புதுப்பெண்டாட்டி காதை கடிப்பதெப்படி
பொறுத்திடாத மாமிரெண்டு பூசை கொடுப்பதெப்படி
காட்டு சிரங்கி—செய்து காட்டு சிரங்கி!

ஓ .....ஓ......ஓ... (பொழைக்கும்)

தொகையரு

ஏ...கண் ஜாடை காட்டும் கைகார ராஜா!
முன்னே வந்து நல்லா பாரு முள்ளில்லா ரோஜா!

பாட்டு

காசு இல்லாமே நடக்காது—ஐயா காரியம் எதுவும்
பலிக்காது
பூசை பண்ணுட்டி அம்மன் தான் இந்த பூமியிலே வரம்
கொடுக்காது
ஓ......ஓ......ஓ... (பொழைக்கும்)

ஓ............
நீ—இருக்கும் இடந்தன்னிலே—லெக்ஷ்மி
என்றும் வாசம் செய்வாள்
சுரக்கும் சுவைப்பாலென்னும் வானமுதம் தந்து
சுகமாக உயிர் வாழ வழி செய்யும் தாயே......

இயற்றியவர்: அ. மருதகாசி பாடியவர்: ஸ்ரீமதி டி. வி. ரத்னம்

இறந்த கால வாழ்வை எண்ணி ஏங்காதே
எதிர் கால இன்ப வாழ்வை உதறித் தள்ளாதே—மனமே
(இறந்த)

பறந்து போகும் வானம்பாடி ஜோடி பார்
அவைபாடும் இனிய காதல் கீதம் தன்னைக்கேள்
—மனமே (இறந்த)

அறுந்து போன பின்னும் அந்த யாழிலே...ஓ...
அறுந்து போன பின்னும் அந்த யாழிலே
புதிய நரம்பை மாட்டி நாதம் சேர்ப்பதில்லையா?
சரிந்து போன வீட்டை இந்த உலகிலே—புயலால்
சரிந்து போன வீட்டை இந்த உலகிலே—மீண்டும்
பழுது பார்த்துக் குடியிருப்பதில்லையா—மனமே (இறந்)

பிறந்த ஜன்மம் மறைவதெங்கும் சகஜமே—மண்ணில்
பிறந்த ஜன்மம் மறைவதெங்கும் சகஜமே—இதை
மறந்து வீணில் வருந்தி என்ன லாபமே...
நிறைந்த துன்பம் நீங்கி வாழ்வில் இன்பமே
சிறந்து வாழும் வழியைத் தேடவேணுமே—மனமே
—(இறந்த)

இயற்றியவர்:
அ. மருதகாசி

பாடியவர்கள்:
கே. தேவநாராயணன், குமாரி உடுதா

பெண்: பயந்தால் ஆகுமா? கண்ணாலே பாடம் படித்து
ஆனபின்
பந்தலில் பலபேர்கள் முன்னாலே பரிவுடன்
என்னை
கல்யாணம் பண்ணாமலே—(பயந்)

ஆண்: சரியா? ஞாயமா? உன் வார்த்தை முறையா
எண்ணிப்பாரம்மா
மருமகள் தனைத்தேட—என் தந்தை
இருந்திடும் போது கல்யாணம் நான் செய்வது
(சரியா)

பெண்: சாகஸம் இது தகாது தந்தையிடம் கேளாமல்
என் மீது
காதலே கொண்டதேன்? கல்யாணம் என்றால்
ஏதேதோ பொய் சொல்வதேன்? (பயந்)

ஆண்: காதல் கொள்ள தந்தை சொல்லும் கருத்தும்
தேவையா—இதை
அறியாப் பாவையா?—இதை நீ அறியாப்
பாவையா?

பெண்: போதும் ஐயா டாக்டரே! புரிந்தது உமது
எண்ணமே

ஆண்: வாதை தரும் மொழியே பேசி வருத்தாதே
என்னை வாயாடியே!

பெண்: தாமதம் இனி தகாது சதிபதியாகாது சுகமேது

ஆண்: சந்தோஷமாய்...

பெண்: வாழவே...

ஆண்: தந்தையைக்கேட்டே கல்யாணம் நான்
செய்குவேன்

இயற்றியவர்: பாடியவர்கள்:
அ. மருதகாசி கே. வி. மஹாதேவன், குமாரி ராணி

ஆண்: காணாத காக்ஷிகளைப்பாரு காலத்தின் கோலந்
தன்னைப்பாரு

"மூ"ணாவின் கையிலே "பா"ணா அகப்பட்டு
முழியா முழிக்கிறதைப்பாரு!

பெண்: சுத்த—"மா"ணாவின் கையிலே பேணா
அகப்பட்டு

மை வீணாகிறதைப்பாரு —(காணாத)

ஆண்: "ஆ"ணா விலாசம் இல்லாத சனங்க
அவஸ்தைப்படுகிறதைப்பாரு

பெண்: அதுவுள்ள மனுஷன் காரு சவாரி
அழகாச் செய்கிறதைப்பாரு—(காணாத)

ஆண்: ஆணாப் பொறந்தும் கையாலாகாத பசங்க
பெண்ணாகத்திரிகிறதெப்பாரு

பெண்: கண்—காணாத போது ஜோப்படி செய்யும்
காவாலி போகிறதெப்பாரு! —(காணாத)

ஆண்: தானாக ஒழைக்காமல் தகிடுதத்தஞ்செய்து
சட்டி தூக்குஞ்சாமிகளைப்பாரு!

பெண்: தன் பாவந்தீர தம்பிடியெப் போடும்
தர்மப் பிரபுவையும் பாரு! —(காணாத)

ஆண்: மானாபிமானம் விட்டு பெரிய மனுஷங்கிட்ட
வட்டமிடுங் காக்காயெப்பாரு!

பெண்: வண்ணான் கடையிலே இரவல் துணியும்
வாங்கிக்கிட்டு
மைனர் வேஷம் போடுவதைப் பாரு!

ஆண்: நாகரீக ஒலகமிதைப்பாரு!

பெண்: போதும் நாணயமாய் வாழ வழி பாரு
—(காணாத)

இயற்றியவர்: அ. மருதகாசி பாடியவர்: ஸ்ரீமதி. ஆர். பாலசரஸ்வதி

கண்ணைத்தான் பறிக்குது கைபடாத முல்லைப்பூ
காலம் செய்யும் ஜாலந்தன்னை
எண்ணி எண்ணி சிரிக்குது !—(கண்ணை)

என்னைக் கொஞ்சம் பாரு—முக அழகில்
எனக்கீடு யாரு
என்னைக்கண்டு ஆசை கொள்ளாரிங்கேதான் யாரு
இருந்தால் நீ கூறு !
என்றே கேட்குது ! இன்பம் சேர்க்குது

தென்றல் காற்றிலே நின்றே ஆடுது
கண்ணைத்தான் பறிக்குது கைபடாத ரோஜாப்பூ
—(கண்)

அங்கமெல்லாந் தங்கம்—அதனாலே ஒளி
வீசுதெங்கும்
மங்கைமனம் கொள்ளை கொள்ளும் மலராம் எனைப்பார்
மருவும் இன்பம் சேர்!
என்றே சொல்லுது! இன்பங்கொள்ளுது
தென்றல் காற்றிலே தேனைத்தூவுது
கண்ணைத்தான் பறிக்குது கைபடாத செவ்வந்தி
—(கண்)

இயற்றியவர்: அ. மருதகாசி பாடியவர்: ஸ்ரீமதி. பாலசரஸ்வதி

சுகம் பெறுவேனா துயர் காணுவேனா
சூழ்நிலை ஏதாகுமோ
தொடர் கதைபோல் துன்பம் மென்மேலே
தொடர்ந்திடவோ பிரிந்தீர் கண்ணாளா?
உடைந்திடுமோ இல்லறக் கோட்டை
உயர்வுடன் விளங்கிடுமோ?—(சுகம்)

கடல் நடுவே புயலில் அலைமோதும்
படகெனவே அலையும் என்மீது
தயவில்லையோ? ஹே ஜகன்மாதா!
தவிப்பதும் சம்மதமா?...நான்...(சுகம்)

இயற்றிவர்: கவி கா. மு ஷெரீப் பாடியவர்: ஸ்ரீமதி ராணி

மேனகையும் நாணுவாள் தாரகையும் நாணுமே
கண்ணாலே என்னைப் பார்த்ததும்—ஓ!... (கண்)

நல்ல புதுமைப் பெண் நானே
யாரும் புகழும் பெண் நானே—நல்ல
அழகு தன்னில் யாருமில்லை மாது என்போலே
—(மேனகை)

வீணை போல பண் பாடுவேன்
வானவில் போல நடனம் நான் ஆடுவேன்
கான மயில் போலே எழில்
வான மதி போலே முகம்
கண்டோரின் உள்ளம்
திண்டாடச் செய்யும்
கட்டுடல் காரி நானே... (மேனகை)

இயற்றியவர்: அ. மருதகாசி பாடியவர்: தங்கப்பா

தொகையறு

மலைபோல துன்பங்கள் வந்தாலுமே—உன்
மனமது தளர்ந்திடாதே!
வருங்கால வீரராம் நிகழ்கால சிறுவர்கள்
வாட நீ பார்த்திடாதே!

பாட்டு

வளரும் ஜீவனடா!
வசந்த காலத் தென்றலடா
மழலைச் சொல்லால்—மனம்
மகிழச்செய்யும் செல்வமடா!—(வளரும்)

தெருவில் நாதியில்லாமல் எலும்புந் தோலுமாய்
சிறுவர்கள் கையேந்தியே திரிவதைப் பார்த்திடடா
—(வளரும்)

விளையும் பயிர் செழித்திடவே
வேலி கட்டிக் காத்திடடா
களையை நீக்குவதைக் கடமையாக நீ கொள்ளடா
உலகம் தழைத்திடவே உயிர் நாடி இவர்களடா!
—(வளரும்)

13

இயற்றியவர்: அ. மருதகாசி பாடியவர்: எஸ். வி. கிருஷ்ணன்

அதிர்ஷ்டம்—ரொம்ப அதிர்ஷ்டம்
பிறப்பது ரொம்ப அதிர்ஷ்டம்—பெரும்
புத்திசாலியான அண்ணனுக்கு தம்பியாக
(பிறப்பது)

சிறப்புடன் அண்ணா வாழ்ந்திடசேவை
செய்வதனால் இல்லை நஷ்டம்—அவர்
திருப்தியடைந்து சிரித்து மகிழ்ந்தால்
தீர்ந்திடும் நமது கஷ்டம்—(அதிர்ஷ்டம்)

பொறுப்புடன் வேலையைப் பார்க்கணும் எதிலும்
இருக்கக்கூடாது பதஷ்டம்—இந்த
பூமியில் அண்ணா புகழும் தம்பியாய்
வாழ்வதே எனக்கு இஷ்டம்!
உயிர் வாழ்வதே எனக்கு இஷ்டம் —(அதிர்ஷ்டம்)

அருமையாய் ஆக்கிப்போட்டிட வீட்டில்
அம்மாவும் இல்லாத போது
அல்லிராணி போல் அதிகாரம் பண்ண
அண்ணியும் வராத போது
சோறாக்கிப் போடணும் தம்பி—அண்ணன்
விரும்பிடும் தங்கக்கம்பி
அம்மா, அண்ணி எல்லாமவனே
அனுபவத்தாலிதைச் சொன்னேன்—என்
அனுபவத்தாலிதைச் சொன்னேன் —(அதிர்ஷ்டம்)

இயற்றியவர்:
தஞ்சை ராமையதாஸ்

பாடியவர்கள்:
திருச்சி லோகநாதன், ஏ. வி. சரஸ்வதி

ஆண்: ஆனைப்பட்டதெல்லாம் தானுனே
போடையிலே......

பெண்: இங்கே அள்டாப்பு ஜோடிவந்து ஆட்டம்
போடுது பராபரமே......

ஆண்: உலகம் அப்படி இருக்குது

இருவரும்: கலகம் இப்படி நடக்குது
உலகம் அப்படி இருக்குது
கலகம் இப்படி நடக்குது
ஊரை ஏச்சு ஒடம்பை வளக்குது

பெண்: ஏ அய்யா!

ஆண்: ஏ அம்மா!

இருவரும்: ஊரை ஏச்சு ஒடம்பை வளக்குது
ஏ அய்யா! ஏ அம்மா!

ஆண்: உள்ளுக்குள்ளே நடக்குது

பெண்: சொல்லப்போனு மொறைக்குது

இருவரும்: உலகம் அப்படி இருக்குது கலகம் இப்படி
நடக்குது

பெண்: உண்ட வீட்டுக்கு ரெண்டகம் செஞ்சவன்
உருப்படுவானு—மச்சான் உருப்படுவானு?

ஆண்: அவன் ஒதைவாங்காமே ஊரைவிட்டுப்
புறப்படுவானு அவன் புறப்படுவானு?

பெண்: கண்டபெண்களை கண்ணையடிச்சவன்
காலந்தள்ளுவானு

ஆண் : (ஆங் !...அவன் எங்கே தள்ளப்போருன் !
நீ பாடும்மே !)
அந்தக் காலாடிப் பயவாலாட்டத்தையும்
கவனிக்காமே எடங்கொடுத்துட்டு—(உலகம்)

ஆண் : உன் டங்காச்சாப்பு ஜோரு
அங்கே டாலடிக்குது பாரு

பெண் : நம்ப தந்தானத்தான் பாட்டைக் கேட்டு
தயங்கி நிற்பவன் யாரு ? எந்த ஊரு ?

பெண் : எந்த ஊரு ? ஆண் : வெளியூரு)

ஆண் : அவனுக்கு சமயம் பார்த்துதாளம் போட்டு
பதுங்குருனே ஜமீந்தாரு —(உலகம்)

ஆண் : தளுக்குக் காட்டியே கணக்குப் பண்ணுதாம்
ஜமீந்தாரின்
பொண்ணு—ஒரு ஜமீந்தாரின் பொண்ணு

பெண் : அந்த மினுக்கைப்பார்த்ததும் மயங்கி
எங்குதாம்
மானேஜரின் கண்ணு—ஒரு மானேஜரின்
கண்ணு

ஆண் : கணக்குப் பண்ணிட்டான்

பெண் : காசைப் பறிச்சுட்டா

ஆண் : கையாலாகாதவன் கையைப்பிடிச்சுட்டான்

பெண் : ஊரைக் கெடுத்துட்டான்

ஆண்: பேரைக் கெடுத்துட்டா

பெண்: உதடு கன்னத்தை

ஆண்: உப்ப வச்சுட்டான்

பெண்: ஊரு சிரிக்குது

ஆண்: காரித்துப்புது

பெண்: வெக்கங் கெட்டது

ஆண்: வெறி பிடிச்சது

பெண்: மானங் கெட்டது

ஆண்: மதமுங் கொண்டது

பெண்: மனுஷனா? மாடா?

ஆண்: மரியாதை யில்லே?

இருவரும்: அடியோ? உதையோ?
குத்தோ?? கொலையோ??

# ஆசை அண்ணா அருமைத் தம்பி

## நடிகர்கள்

| | | |
|---|---|---|
| A. P. நாகராஜன் | ... | சிவராமன் |
| T. R. ராமச்சந்திரன் | ... | பலராமன் |
| சாய்ராம் | ... | பாண்டியன் |
| ஏழுமலை | ... | பண்டிட் |
| சிவசூரியன் | ... | ஆனந்தம் (ஜமீன்தார்) |
| நாராயண பிள்ளை | ... | சகுனி |
| கருணாநிதி | ... | கருப்பு |
| ரகுவீர் | ... | டாக்டர் சுகுமாரன் |
| பலராம் | ... | போல்க் டேன்சர் |

## நடிகைகள்

| | | |
|---|---|---|
| மாதுரி தேவி | ... | கண்ணம்மா |
| சுலோசனா | ... | பாரதி |
| சுசீலா | ... | கல்யாணி |
| பாக்கியம் | ... | சிகப்பு |
| விமலா | ... | தனம் |
| ஸ்கிரீன்பிலே | ... | S. முகர்ஜி |
| வசனம் | ... | சக்தி கிருஷ்ணசாமி |
| பாடல்கள் | ... | ராமையதாஸ், மருதகாசி, ஷெரிப் |
| எடிட்டிங் | ... | B. கந்தசாமியும், விஜயரங்கம் |
| புரோசஸ்சிங் | ... | C. A. சுந்தரராஜ், சிட்னி, நியூடோன் |
| படபிடிப்பு | ... | T. மார்கோனி |
| சங்கீதம் | ... | K. V. மகாதேவன் |

டைரக்ஷன் : **G. R. ராவ்** தயாரிப்பு : **மாதுரி தேவி**

ஸ்டூடியோஸ் : சென்ட்ரல் ஸ்டூடியோஸ், (கோயம்பத்தூர்)

பிலீம் சென்டர் (மதராஸ்) நியூடோன் ஸ்டூடியோஸ் (மதராஸ்)


ஸ்ரீமதி பிக்சர்ஸ்
ஆசை அண்ணா
அருமைத் தம்பி கதை
Balan